செய்தி வெளியீடு எண்–42 நாள்: 12.1.2010

# மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வணிகவரித்துறை அலுவலகர்களின் பயன்பாட்டிற்காக புதிய வாகனங்களை வழங்கினார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள், சுமார் 64 இலட்சம் ரூபாய் மதிப்பில், மொத்தம் 15 புதிய வாகனங்களை (7 சீருந்து மற்றும் 8 ஈப்புகள்) தலைமைச் செயலகத்தில் இன்று (12.1.2010) வணிகவரித்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கினார்.

தற்பொழுது, மதுரை, திருநெல்வேலி, சென்னை ஆகிய கோட்டங்களில் உள்ள வணிகவரி அலுவலர்களுக்கு, வரிவசூல் நடவடிக்கையினை துரிதப்படுத்துவதற்காகவும், மதிப்பு கூட்டு வரி ஏய்ப்பு நடவடிக்கைகளை செயலாக்கப் பிரிவு கண்காணிப்பதற்காகவும் இவ்வாகனங்கள் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, தமிழக அரசால் ரூபாய் 64 இலட்சத்து, 78 ஆயிரத்து, 684 மதிப்பீட்டில் பதினான்கு வாகனங்கள் வணிகவரித்துறை பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.எஸ்.என்.எம். உபயதுல்லா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி, வணிகவரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர் திரு. த. ஜேக்கப், வணிகவரித்துறை ஆணையர் திரு.வி.கே. ஜெயக்கொடி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

செய்தி வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,செ–9